6. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஊ) சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு (உரிமை மாற்றம் மற்றும் ஒப்படைத்தல்) சட்டமுன்வடிவு, 2022 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2022 ஆம் ஆண்டு சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு (உரிமை மாற்றம் மற்றும் ஒப்படைத்தல்) சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

15. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—*தொடர்ச்சி*

(இ) சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு (உரிமை மாற்றம் மற்றும் ஒப்படைத்தல்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2022 ஆம் ஆண்டு சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு (உரிமை மாற்றம் மற்றும் ஒப்படைத்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2022), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பேரவை முன்னவர் அவர்கள் சொன்னதைப்போல, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய வெளிநாட்டுப் பயணம் வெற்றிபெற தமிழக மக்களின் சார்பில் என்னுடைய வாழ்த்துதலையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

"2022 ஆம் ஆண்டு சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு (உரிமை மாற்றம் மற்றும் ஒப்படைத்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2022)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 21-3-2022 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.